## செயற்பொறியாளர், நீவது., ஆரணியாறு வடிநில கோட்டம் ,சேப்பாக்கம்,சென்னை – 5.

முன்னிலை: பொறி. கோ.ரா.ராதாகிருஷ்ணா, பி.இ., எம்.எஸ்.,
செயற்பொறியாளர், நீ.வ.து.,

குரோதி, பங்குனி 4
திருவள்ளுவர் ஆண்டு 2055

### செயல்முறை ஆணை எண். நிஎ2 /491–1/ 2024 / நாள்: 18.03.2025.

பொருள்: பணியமைப்பு – நீ.வ.து – த.நா.அ.ப.தொகுதி – திருமதி.J.ஷெர்லின் ஷாமிலி, இளநிலை உதவியாளர் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணி வரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் துவக்கி ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) நீ.வ.து., சென்னை–5 அவர்களின் செயல் முறை ஆணை எண். எஸ் 3(2)/41119/2023/நாள்:20.02.2024.
2. தலைமைப் பொறியாளர், நீ.வ.து., சென்னை மண்டலம்,சென்னை– 5 அவர்களின் செயல்முறை ஆணை எண்.இ1(1)/1561/ 2023/ நாள்: 28.02.2024.
3. சிறப்பு தலைமைப் பொறியாளர், நீ.வ.து., பாலாறு வடிநில வட்டம், சென்னை–5 அவர்களின் செயல்முறை ஆணை எண்.இ2/ 672/ 2024/நாள்: 08.03.2024.
4. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். நிஎ2/491/2024/நாள்: 13.03.2024.
5. அரசாணை (நிலை) எண். 33 / தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை நாள்: 08.03.2023.
6. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நீர்வளத்துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்களின் கடித எண். 1321/ பி1 / 2024–1/ நாள் : 02.04.2024
7. முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) நீ.வ.து., சென்னை–5 அவர்களின் கடித எண். எஸ் 3(2)/ 21951/ 2024/ நாள் : 29.04.2024.
8. உதவிசெயற்பொறியாளர், நீ.வ.து., கடலரிப்பு தடுப்பு உபகோட்டம், சேப்பாக்கம், சென்னை–5 அவர்களின் கடித எண். கோ1 / உ.செ.பொ/க.அ.த.உ/2025/நாள்: 14.03.2025.

*-*-*-*-*-*-*

பார்வை –1 முதல் 4–ல் காணும் செயல்முறை ஆணைகளின்படி காலஞ்சென்ற அரசு ஊழியர் திருமதி.அ.பேபி சபீனா, இளநிலை வரைதொழில் அலுவலரின் மகள் திருமதி.J.ஷெர்லின் ஷாமிலி என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டதை தொடர்ந்து, தனியர் இக்கோட்டத்தின் கீழ் இயங்கும் உதவிசெயற்பொறியாளர், நீ.வ.து., கடலரிப்பு தடுப்பு உபகோட்டம், சென்னை –5 அலுவலகத்தில் 13.03.2024 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றார்.

த.பி.பா...

பார்வை –8–ல் காணும் உதவி செயற் பொறியாளர் கடிதத்தில் திருமதி.J.ஷெர்லின் ஷாமிலி, இளநிலை உதவியாளர் அவர்களுக்கு அப்பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு கோரி தனியர் பணி காலத்தில் ஊதியமில்லாத அசாதாரண விடுப்பு ஏதும் துய்க்க வில்லை எனவும், அவர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கைகளோ (அ) குற்றச்சாட்டுகளோ நிலுவையில் இல்லை எனவும் சான்றுகள் அளித்துள்ளார். பார்வை –7–ல் காணும் முதன்மை தலைமை பொறியாளர் அவர்களின் கடிதத்தின் வாயிலாக பெறப்பட்ட பார்வை–5 மற்றும் 6–ல் காணும் அரசாணை மற்றும் அரசு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலில் கருணை அடிப்படையில் பணி நியமன விதிகளின்படி கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணிவரன்முறை குறித்த கருத்துருவில் விதித்தளர்வு தேவைப்படாத இனங்களில் பணி நியமன அலுவலர் நிலையில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், விதி 17–ன்படி கல்வித் தகுதி தவிர இதர விதித் தளர்வு தேவைப்படும் பணியாளர்களின் பணிவரன்முறை தொடர்பான கருத்துருக்களை மட்டும் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், திருமதி.J.ஷெர்லின் ஷாமிலி, இளநிலை உதவியாளர் பணிவரன் முறை தொடர்பாக விதித் தளர்வு கோரி அரசுக்கு கருத்துரு அனுப்ப வேண்டிய அவசியம் எழாத காரணத்தினால் கீழ்கண்டவாறு அவரது பணியினை வரன்முறை செய்யப்பட வேண்டும்.

| வ.எண் | பெயர் | பதவி | பிறந்த தேதி | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|---|
| 1. | திருமதி.J.ஷெர்லின் ஷாமிலி | இளநிலை உதவியாளர் | 07.09.1990 | 13.03.2024 முற்பகல் | 13.03.2024 முற்பகல் |

எனவே, தனியரின் பணியினை தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 (தமிழ்நாடு சட்டம் 2016) பிரிவு 17(1)–ன்படி திருமதி.J.ஷெர்லின் ஷாமிலி, இளநிலை உதவியாளர் அவர்களுக்கு பணியில் சேர்ந்த நாளான 13.03.2024 முற்பகல் முதல் அப்பதவியில் பணிவரன் முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

மேலும், தனியர் பணியில் சேர்ந்த நாளிலிருந்து இளநிலை உதவியாளர் பதவியில் மூன்றாண்டுகளில் இரண்டாண்டு தொடர்ந்து பணியாற்றலுக்குட்பட்டு தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணை வழங்கப்படுகிறது.

இவரது தகுதிகாண்பருவ காலத்திற்குள் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் நடத்த பெறும் அரசு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

18/03/25

செயற்பொறியாளர், நீவது.,
ஆரணியாறு வடிநில கோட்டம்,
சேப்பாக்கம், சென்னை–5

18.03.25

பெறுநர்
திருமதி.J.ஷெர்லின் ஷாமிலி
இளநிலை உதவியாளர்,
கடலரிப்பு தடுப்பு உபகோட்டம், சேப்பாக்கம், சென்னை–5
வழி உதவிசெயற்பொறியாளர், நீ.வ.து., கடலரிப்பு தடுப்பு உபகோட்டம், சேப்பாக்கம், சென்னை–5